# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2020.09.04 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்)

***2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம், 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன், சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி மற்றும் கப்பற் கேழ்வுப் பெறுமதி தொடர்பில் விதிக்கப்பட்டு அறவிடப்படவேண்டிய அறவீட்டை அதிகரிப்பதற்குமாகும்.*

# துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு
## (திருத்தம்)

ச.வ.- ஓ. 61/2019

## 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1**. இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின்     ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2019, திசெம்பர் 6 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) இரண்டாம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி மற்றும் கப்பற் கேழ்வுப் பெறுமதி தொடர்பில் விதிக்கப்பட்டு அறவிடப்படவேண்டிய அறவீடு -

(அ) 2011, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குவதும் அத்துடன் 2015, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கு 5 சதவீதப்படியும்;

(ஆ) 2016, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குவதும் அத்துடன் 2019, திசெம்பர் 5 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கு 7.5 சதவீதப்படியும்; அத்துடன்

(இ) 2019, திசெம்பர் 6 ஆந் தேதியன்றும் அதன் பின்னரும் 10 சதவீதப்படியும்;

கணிப்பிடப்படுதல் வேண்டும்.".

**3.** இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு திசெம்பர் 6 ஆந் தேதி தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை புறக்குறிப்பிடப்படுகின்ற தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான அறவீட்டை சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி விதிக்கின்றவிடத்து அல்லது சேகரிக்கின்றவிடத்து, அவர் உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளதாக அத்துடன் செயலாற்றிக் கொண்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விதிப்பனவு அல்லது சேகரிப்பு எல்லா நோக்கங்களுக்குமாக செல்லுபடியான முறையில் செய்யப்பட்டிருப்பதாக அத்துடன் செய்யப்படவிருப்பதாக கருதப்படுதலும் வேண்டும். சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய விதிப்பனவு அல்லது சேகரிப்பு தொடர்பில் எல்லா குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கும் எதிராக இத்தால் நட்டோத்தரவாதம் அளிக்கப்படுகின்றார்: செல்லுபடியாகுதல்.

ஆயின், மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகள், சொல்லப்பட்ட காலப்பகுதியின்போது இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக சேகரிக்கப்பட்ட ஏதேனும் விதிப்பனவு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிபு அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் முடிவுறா வழக்கு நடவடிக்கைகளை பாதித்தலாகாது.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.